DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT, NAMAKKAL.
**CASE NO.CC.No. 158/2024**
**Cross of PW– 1**

| | | |
|---|---|---|
| Name | : | சுப்பரமணி |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the

Date: 29.06.2026

**விசாரணை தொடங்கும் நேரம்: மதியம் 12.40 மணி**

**(எதிரி ஆஜர்.**

**மனுவின் பேரில் மனுதாரர் திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட புகார், பிரமாணவாக்குமூலம், வழக்கறிஞர் அறிவிப்பு ஆகியவற்றில் உள்ள சங்கதிகளை நான் தகவல் அளித்தன் பேரில் தான் வழக்கறிஞர் தயாரித்தார் என்றால் சரிதான் அதை படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். மேற்படி புகார் மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் 25.10.2023ம் தேதியில் கைமாற்று கடனாக ரூ.10லட்சம் தேவைப்பட்டதாகவும் ஒரு மாதத்திற்குள் திருப்பி தருவதாக உறுதி அளித்ததன் பேரில் கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி தேதியில் எதிரிக்கு எங்கு வைத்து வழக்கு தொகை கொடுக்கப்பட்டது என்ற விவரம் இல்லை என்றால் சரிதான். எதிரி என்னிடம் எந்த தேதியில் என்னிடம் பணம் கேட்டார் என்ற விவரத்தை தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை.

2. எதிரியை ராஜசேகர் என்பவர் அறிமுகப்படுத்தியதன் மூலம் தான் தெரியும். நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களான புகார் மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் எதிரியிடம் ரூ.10லட்சம் எந்த முறையில் கொடுத்தேன் என்ற

விவரத்தை சொல்லியுள்ளீரா என்றால் கையில் வைத்து தான் கொடுத்தேன் என்று கூறியுள்ளேன். எதிரிக்கு ரூ.10லட்சம் கடன் கொடுத்தது சம்பந்தமாக வருமானவரி துறைக்கு, அரசுக்கு தகவல் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி ரூ.10லட்சம் தொகையை வருமான வரி துறைக்கு தகவல் அளிக்காமல் எதிரிக்கு கொடுக்கப்பட்டதால் அது முறையாக வரி செலுத்தாத கருப்பு பணம் என்றால் சரியல்ல.

3. எதிரிக்கு வழக்கில் கூறியுள்ள ரூ.10லட்சம் கடன் கொடுக்கவில்லை என்றாலும், மேற்படி பணம் வருமான வரி செலுத்ததால் கருப்பு பணம் என்பதாலும் அதை கேட்பதற்கு சட்டப்படி உரிமம் இல்லை என்றால் சரியல்ல. 25.10.2023ம் தேதி நான் கையிருப்பு தொகையாக ரூ.10லட்சம் வைத்திருந்ததற்கான ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் விவசாயி ஆவணங்கள் எதுவும் என்னிடம் இல்லை. விவசாயி என்பதற்கான ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரிக்கு ரூ.10லட்சம் பணம் கொடுக்கும் அளவிற்கு எனக்கு வசதி இல்லை என்றால் சரியல்ல. நேரிடியாக எந்த அறிமுகமும் இல்லாத ஒரு நபரிடம் எவ்வித ஆவணமும் பெற்றுக்கொள்ளாமல் ரூ.10லட்சம் பணம் கொடுத்துள்ளேன் என்று பொய்யாக சொல்கிறீர் என்றால் பழக்கத்தின் பேரில் ஒரு மாதத்தில் திருப்பி தருவதாக கூறியதன் பேரில் காசோலையை பெற்றுக்கொண்டு பணம் கொடுத்தேன்.

4. 25.10.2023ம் தேதியில் எதிரியிடம் எத்தனை காசோலை வாங்கினேன் என்றால் ஒரு காசோலை பெற்றுக்கொண்டு பணம் கொடுத்தேன். மாற்றுமுறை ஆவணச்சட்டப்படி காசோலை பெற்றுக்கொண்டு பணம் கொடுத்ததால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. எனக்கும், எதிரிக்கும் நேரடியாக வரவு செலவு இல்லை என்றால் சரியல்ல. எதிரியின் ஊரை சேர்ந்த சுரேஷ் என்பவர் 10ரூபாய் வட்டிக்கு ரூ.50,000/–கடன் வாங்கியதாக கூறியுள்ளார் என்றால் சரியல்ல. சுரேஷ் கடன் பெறும்போது சாட்சியாக எதிரியின் வெற்று காசோலையை தங்களிடம் கொடுத்தார் என்றால் சரியல்ல. சுரேஷ் என்பவர் 10ரூபாய் வட்டியுடன் அசல் தொகையை திரும்ப செலுத்திவிட்டார் என்றால் சரியல்ல. அக்கரமலாபம் அடைய வேண்டி எதிரி ஜாமினுக்காக கொடுத்த வெற்று காசோலையை இவ்வழக்கிற்காக பொய்யாக கூறி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, எதிரி பெற்ற கடனுக்காக

தான் வழக்கு காசோலையை என்னிடம் தந்தார். வட்டி தொழில் செய்து வருகிறீரா என்றால் இல்லை. வட்டிக்கு யாருக்காவது பணம் கொடுத்துள்ளீரா என்றால் இல்லை. எதிரி என்னிடம் பணம் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. ரூ.10லட்சம் கொடுக்கும் அளவிற்கு வசதி இல்லாமல் பொய்யாக எதிரியிடம் பணம் கொடுத்ததாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. அதனால் இவ்வழக்கு தள்ளுபடியாக வேண்டியது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –** இல்லை.